# சித்தர் சூஃபி இலக்கியங்களில் சமயம் கடந்த சமரசப் பண்பு

# Harmony Beyond Religion in Siddhar and Sufi Literatures

கோவி.சிவபாலன் / G.Sivapalan[1]

முனைவர் சு.மணிமாறன் / Dr.S.Manimaran[2]

Date of submission: 2021-05-25
Date of acceptance: 2021-06-20
Date of Publication: 2021-07-20
Corresponding author's Name:
Dr.S.Manimaran
Email: manimaran23@um.edu.my

## Abstract

Siddhar literature is a collection of poems composed by Tamil Siddhars, whereas, Sufi literature is a collection of poems composed by Sufis, the Tamil Muslim sages who resided in South India. Many Sufis have emerged among the Tamil speaking population in Tamil Nadu and Sri Lanka. Their poems, which are composed in the Tamil language, have remarkably similar themes found in Siddhar poems. Thus, the library-research based analytical comparative study aims to identify and further examine these similarities and differences between the Siddhar and Sufi philosophies. Upon comparing both literatures, it was noted that there were several similarities as well as differences between the two literatures. Since Siddhars and Sufis both dedicated their lives to the journey of attaining enlightenment, this could be the reason for the similarities among the themes of their poems. Furthermore, Siddhar poems were widely known among the people even before the times of Sufis. Sufis who were on the journey of enlightenment found these poems to be their guide, which can further explain the influence of Siddhar poems in Sufi literature. In any case, Siddhar and Sufi literatures have contributed in several aspects for the Hindu and Muslim populations in Tamil Nadu: aiding them towards their journey of enlightenment, teaching them to live beyond the confines of castes or religions, being well versed in the ways of Siddha medicine, acquiring religious Tamil literatures of quality, and having access to several meditation and worship locations. However, the impact of Siddhar and Sufi literatures is not only confined to Tamil Nadu but has expanded its influence to several countries that host Tamilians.

**Key Words:** Siddhar Literatures, Sufie Literatures, Guru, Enlightenment, Harmony beyond religion, Siddha Philosophy.

## முன்னுரை

ஆத்ம ஞானம் என்பது மனித குலம் என்று தோன்றியதோ அன்று தொடங்கி அவனோடு இரண்டறக் கலந்து வந்திருக்கின்றது. ஆனால் இது இடம், காலம், சூழலுக்கேற்ப வேறுபட்டு வந்துள்ளது. ஆத்ம ஞானம் என்பது எச்சமயத்தவருக்கும் உரியது ; எந்நாட்டவருக்கும் பொதுவானது. ஆனால், ஒவ்வொரு சமயத்தவரும் அவரவருடைய நெறிமுறைகளுக்கேற்ப ஆத்ம ஞானத்தை வளர்த்து வந்துள்ளனர்.

[1] The author is a Senior Lecturer in the Department of Indian studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. gsiva_palan@um.edu.my

[2] The author is a Senior Lecturer in the Department of Indian studies, University of Malaya, Kuala Lumpur, Malaysia. manimaran23@um.edu.my

ஒவ்வொரு நாட்டவரும் அவரவரின் மண்வாசனைக்கேற்ப ஆன்மீகத் தேடலுக்கு வழிகாட்டியுள்ளனர். இவர்களின் வழிவகைகள் வேறாக இருப்பினும் அனைவரது நோக்கமும் ஆன்மீகத் தேடலை மையமாகக் கொண்டே இருந்துள்ளது. எனவே, ஆத்ம ஞானம் என்பது உலகனைத்துக்கும் பொதுவானது என்னுங் கருத்து தெளிவாகிறது.

தமிழகத்தில் ஆன்ம நெறி வளர்த்த பெரியோர்களுள் சித்தர்கள் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றனர். இச்சித்தர்கள் தங்கள் கருத்துகளைப் பாடல்களாகப் பாடி வைத்துள்ளனர். பொதுவாக சித்தர்களை இந்து சமயத்தோடு சார்த்திப் பார்ப்பதுவே பெரு வழக்காக இருந்து வருகின்றது. சித்தர் குழாத்துள் இருக்கக் கூடிய முஸ்லீம் சித்தர்களைப் (சூஃபி) பற்றிய பார்வை மக்களிடமும் ஆய்வாளர்களிடமும் சற்றுக் குறைவாகவே உள்ளது. தமிழ் முஸ்லீம் சித்தர்கள் படைத்துள்ள யோக, மருத்துவப் பாடல்கள் எல்லாம் விலைமதிக்க முடியாத பெருஞ்செல்வங்களாக விளங்குகின்றன. தம் பாடல்களின் வழி தமிழ்ச் சமுதாயத்தின் ஆன்மத் தெளிவுக்கு அவர்கள் ஆற்றியுள்ள இலக்கியப் பணி போற்றுதற்குரியதாகும். தமிழ் நாட்டு நிலப்பரப்பில் இருந்துகொண்டு சித்தர்களும் சூ·பிகளும் செய்த ஆன்மீகப் பணி மிகப் பெரியதாகும். இவர்களது தத்துவங்கள் இந்து மற்றும் இஸ்லாம் சமயப் பின்னணியைக் கொண்டிருந்தாலும் இவர்களது நோக்கம் ஒன்றையே அடைவாகக் கொண்டுள்ளது. இரு வேறு சமயப் பின்னணியைக் கொண்ட இவ்விரு தத்துவங்களையும் அவற்றின் இலக்கியங்களின் வாயிலாக ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது அவசியமாகும்.

## ஆய்வின் பின்னணி

ஆத்ம ஞானத்துக்கு வழிகாட்டிய பெரியோர்கள் ஆத்ம ஞானிகள் என அழைக்கப்பட்டனர். உலகனைத்துமுள்ள ஆத்ம ஞானிகளிடத்தில் இறையனுபவ நிலையைப் பெறுவதில் ஒரு பொதுமைத் தன்மை இருப்பதை நன்குணர முடிகின்றது. எப்படி உலகனைத்தும் உள்ள சமயக் கோட்பாடுகளில் நல்லனவற்றை நன்மை தருவன என இனங்காட்டுவதிலும் தீயவனற்றைத் தீமை தருவன என இனங் காட்டுவதிலும் பொதுமைப் பண்பு காணப்படுகிறதோ அதுபோலவே சமயங்கள் வழிவகுத்துக் காட்டும் ஆத்ம ஞானத்திலும் பொதுமைக் கூறுகள் உள்ளடங்கி இருப்பதை நன்குணரலாம்.

இந்தப் பொதுமைக் கூறுகள் அனைத்தையும் எடுத்துக்கொண்டால், அவை போதிக்கும் நெறிமுறைக்கும், மக்கள் நடைமுறைப்படுத்துவதற்கும் இடையில் பெரிய இடைவெளி இருப்பதை நன்குணர முடிகின்றது. இதற்கு, சமயக் கொள்கைக்கும் நடைமுறையில் மனிதன் வாழுகின்ற வாழ்விற்கும் இடையே காணப்படும் முரண்பாடே காரணம் எனக் கூறலாம். இத்தகைய முரண்பாடுகளைக் களைந்தெறிய, ஒவ்வொரு சமயத்துக்குள்ளேயும் இருந்த ஆன்மீகத் தெளிவு பெற்ற பெரியோர்கள் முயற்சி செய்தார்கள்.

இவர்கள் மனித வாழ்வுக்கு வழிகாட்டும் சமய நெறிகளின் உண்மையான தத்துவங்களை மெய்ஞ்ஞானப் பின்புலத்துடன் வழங்கினார்கள். இவர்கள் இறையனுபவம் பெற்றவர்களாகவும் மெய்ஞ் ஞான பின்புலத்தை அறிந்தவர்களாகவும் இருந்தனர். அவர்கள் தாமுணர்ந்த உள்ளுணர்வை வெளிப்படுத்திக் காட்டவும் முற்படலாயினர். இவ்வெளிப்பாடு அவரவர் சார்ந்த சமயக் கோட்பாடுகளுக்குட்பட்டே அமைந்திருந்தது. இவ்வகையில் இந்து சமயத்தினடிப்படையில் எழுந்த ஆத்ம ஞானக் கருத்துகள் சித்தர் தத்துவம் என்றழைக்கப்படுகின்றன. அதுபோலவே இஸ்லாமிய சமயத்தினடிப்படையில் எழுந்த ஆத்ம ஞானக் கருத்துகள் சூ·பித் தத்துவம் என்றழைக்கப்படுகின்றன.

## ஆய்வு நெறி

இந்த ஆய்வுக் கட்டுரை நூலக ஆய்வு முறையில் திரட்டப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. கட்டுரையாளரின் வசமிருந்த சில நூல்களைத் தவிர, கோவிட் 19 பெருந்தொற்றுக் காரணமாக நூல்நிலையங்கள்

பயன்பாட்டுக்கு மூடப்பட்டிருக்கும் நிலையில், பெருவாரியான தரவுகள் இணையத்தின் வழியாகவே பெறப்பட்டன. கட்டுரைத் தலைப்புக்கும், நோக்கத்துக்கும் ஏற்ப தரவுகள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கருத்து முடிவுகள் அடையப்பட்டன.

### முன்னோடி ஆய்வுகள்

இந்த ஆய்வுக்கென நூலோட்டம் மேற்கொண்டபோது சித்தர் இலக்கியங்களையும் சூஃபி இலக்கியங்களையும் பற்றிய சில நூல்களும், பெருவாரியாக இணையத் தரவுகளும் கிடைத்தன. இத்தரவுகள் சித்தர், சூஃபி இலக்கியங்களையும் தத்துவங்களையும் பற்றிய பின்னணியை அறிந்துகொள்வதற்குப் பெரிதும் துணை நின்றன. இவ்விலக்கியங்களில் காணப்படும் சமயம் கடந்த சமரசத் தகவல்களை முன்னிருத்தி ஓரிரண்டு எழுத்துப் படிவங்களில் காணப்பட்ட சிறுகுறிப்புகளைத் தவிர வேறெந்தத் தரவுகளும் கிட்டவில்லை. இவற்றை நோக்க, ஆய்வாளரின் தற்போதைய தலைப்பை ஒட்டி யாதொரு ஆய்வும், எழுத்துப்படைப்பும் இல்லாத வெற்றிடம் இருப்பது தெளிவாகின்றது. தற்போதைய இந்த ஆய்வு அந்த வெற்றிடத்தை நிரப்ப உதவும்.

### கட்டுரையின் நோக்கம்

இக்கட்டுரை சித்தர் இலக்கியங்களையும் சூஃபி இலக்கியங்களையும் ஒப்பீட்டு முறையில் ஆராய்கின்றது. இவ்விரு இலக்கியங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது அவற்றுள் சமயம் கடந்த சமரசப் பண்புகள் நிறைந்திருப்பது தெரிய வருகின்றது. அப்பண்புகளை இனங்கண்டு விளக்கப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### சித்தர்சூஃபி இலக்கியங்கள்

தமிழ்ச் சித்தர்கள் பாடிவைத்த பாடல்கள் சித்தர் இலக்கியம் என அழைக்கப்படுகின்றன. தென் இந்தியாவிலுள்ள தமிழ் நாட்டில் தமிழ் முஸ்லீம்களாகிய சூஃபி மெய்ஞ்ஞானிகள் அதிக எண்ணிக்கையில் இருந்துள்ளனர். அவர்கள் சூஃபி தத்துவக் கருத்துகளை உள்ளடக்கியப் பாடல்களை நிறைய புனைந்திருக்கின்றார்கள். அவை சூஃபி மெய்ஞ் ஞான இலக்கியம் என்றழைக்கப்படுகின்றன. இவ்விலக்கியங்கள் தமிழ் மொழியில் படைக்கப்பட்டுள்ளன. இஸ்லாமிய சூஃபிகளும் தமிழ் நாட்டுச் சித்தர்களும் மெய்ஞ்ஞானக் கருத்துகளின் அடிப்படையில் ஒத்த சிந்தனை உடையவர்கள். இதன் காரணமாக தமிழகத்தில் புது வகையான ஞான இலக்கியங்கள் தமிழ் மொழியில் உருவாகின.

தமிழக சித்தர்களுக்கிணையாக முஸ்லீம் சூஃபிகளும் தமிழ் இலக்கிய படைப்புகளின் மூலமாக தங்களுடைய சூஃபித்துவக் கருத்துக்களை எடுத்துரைக்கத் தொடங்கினார்கள். சித்தர்களும் சூஃபிகளும் தமிழக மக்களுக்காகவே தமிழிலக்கியங்களைப் படைத்தனர். சூஃபித்துவம் தென் இந்தியாவிலும் இலங்கையிலும் பரவியதன் காரணமாக சூஃபித்துவத் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்ட இஸ்லாமியத் தமிழ் இலக்கியங்கள் தோன்றலாயின. வட இந்திய மொழிகளிலும் சூஃபித்துவத் தத்துவங்களை விளக்கும் இஸ்லாமிய இலக்கியங்கள் தோன்றியுள்ள போதிலும் தமிழ் மொழியில்தான் அவை மிகச் சிறந்து விளங்குகின்றன.

### ஆய்வின் வரையறை

இந்த ஒப்பீட்டு ஆய்வை மேற்கொள்வதற்கு சித்தர் இலக்கியப் பாடல்களும் சூஃபி இலக்கியப் பாடல்களும் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்விரு இலக்கியங்களிலும் சமயம் கடந்த சமரசப் பண்புகள் நிறைந்திருக்கின்றன. எனவே இவ்விலக்கியங்கள் வெளிப்படுத்தும் எல்லாக் கருத்துக்களையும் ஆராயாமல் அவைச் சுட்டுகின்ற குருவின் இன்றியமையாமை, இறை ஒருமை, சித்தர்சூஃபி திருத்தலங்கள் ஆகிய கருத்துகளை மட்டுமே இக்கட்டுரை ஆய்வுக்கு உட்படுத்துகின்றது.

### குருவின் இன்றியமையாமை

அனைத்து மனிதனிடத்தும் தெய்வீக ஆற்றல்கள் புதைந்துக் கிடக்கின்றன. அரும்பெரும் காரியங்களைச் செய்து

சாதிக்கின்ற பல வல்லமைகள் மனிதனிடத்து மறைந்து கிடக்கின்றன. அனுக்கிரகம் என்று சொல்லப்படும் அருள் உதவி, சான்றோர் ஒருவரிடமிருந்து நல்ல ஆத்ம சாதகன் ஒருவனுக்குக் கிட்டுமாகில் அவனுடைய தெய்வீக சக்திகள் தோற்றத்திற்கு வருகின்றன. பரம்பொருளை அறிந்து கொண்டு பெருவாழ்வு வாழக்கூடிய விழிப்பு நிலை அவனுக்கு உண்டாகின்றன. ஆத்ம சாதனத்தில் அவனுக்கு முன்னேற்றம் விரைவில் வந்தமைகின்றன. இதனால் ஆத்ம விழிப்பிற்காக ஒருவருக்குக் 'குரு' அவசியமாகின்றார் என்பது வெளிப்படை. எவரிடமும் இல்லாதது என்று எதுவும் இல்லை; எனினும் மெய்க் குருவினைச் சந்தித்து உபதேசம் பெற்றாலன்றி இவ்வுலகில் உய்வினை அடைய இயலாது என்பர் சித்தர் (பெரிய ஞானக் கோவை, 1949, p.712).

ஞான ஒளியை தனித்தே முயன்று பெற்றுவிட முடியாது என்பதை உணர்ந்த சூஃபிகள் அதற்கு முறையான ஞான குருவின் துணை வேண்டும் என்பதையும் சுட்டுகின்றனர். இதற்காக ஞானப் பாதையில் வழிநடத்திச் செல்லக்கூடிய குருவின் துணையைப் பெரிதும் வலியுறுத்துகின்றனர் (அஜ்மல் கான் - உவைஸ், 1997, p.230-623). 'குருவில்லா வித்தை பாழ்' என்பதும் 'தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது' என்பதும் முன்னோர்களின் அனுபவத்தின் வாயிலாக எழுந்த பழமொழிகள் ஆகும். இதையே சூஃபிகள், 'குருவற்ற ஞானப் பாதை குணங்களற்ற சீடனை உருவாக்கி விடும்' என்றும் இந்நிலை 'கருவற்ற விதைக்கு ஒப்பாகும்' என்றும் குறிப்பிடுகின்றார்கள் (அஜ்மல் கான் - உவைஸ், 1997, p.63).

சித்தர் நெறியும் சூஃபி நெறியும் தியானம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றன. தியானம் செய்வதற்கு மனதைச் செம்மைப் படுத்தும் வழியைக் குருவிடம் அறிய வேண்டும். மெய்ஞ்ஞான குருவின் துணையோடுதான் ஞானம் பயில வேண்டும். மெய்ஞ்ஞானத்தின் உண்மையான விளக்கத்தை புனித தீர்த்தங்களில் மூழ்கி நீராடுவதாலோ தானம் செய்வதாலோ அல்லது நூறு பிராணாயாமம் செய்வதாலோ அடைய முடியாது. ஆனால் சரியான குருவிடம் உபதேசம் பெற்று, அதைத் தொடர்ந்து சிந்தித்து வருவதனால் அடைந்து விடலாம் (கமலக்கண்ணன், 1997, p.134).

உண்மையில் முத்தி அல்லது மோட்சம் என்பது குரு கொடுக்க சீடன் பெற்றுக்கொள்ளக் கூடியதல்ல.குருவின் உபதேசம் என்பது ஆற்றைக் கடப்பதற்குப் படகில் ஏறி எப்படிச் செல்வதென்று, கரையில் இருந்து கொண்டே வழிகாட்டுவதைப் போன்றதாகும். மெய்ஞ்ஞான குருவை அடைந்து பணிவோடு வேண்டினால், அவர் கருணையோடு பயன் ஏதும் எதிர்பாராமல் உபதேசம் தந்தருள்வார். பிறவியை அறுத்துப் பேரின்பம் பெறுவதற்கான ஞான மார்க்கத்தைக் காட்டியருள்வார். அவ்வாறு உரிய ஆசானிடம் ஞானக் கல்வியைக் கசடறக் கற்று, கற்ற பின்னர் அதற்குத் தக்கவாறு தவ நெறியில் நிற்க வேண்டும் என சித்தர்களும் சூஃபிகளும் அறிவுறுத்துகின்றனர்.

குருவின் இன்றியமையாமையைப் பற்றி வலியுறுத்திக் கூறியுள்ள சித்தர்களும் சூஃபிகளும் போலி குருமார்களிடம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதையும் வலியுறுத்துகின்றனர். போலிகுருமார்களின் தாக்கம் இந்து சமயத்தில் சற்று அதிகமாகவே இருந்துள்ளது. இந்து சமய வழிபாட்டு முறையிலுள்ள சடங்கு சம்பிரதாயங்களைக் காரணமாக வைத்தே இதில் அதிகமான போலி குருமார்கள் தோன்றினார்கள். சித்து வேலைகள் செய்து மக்களைக் கவர்வதும், பொருளறியாமல் மந்திரங்களைச் சொல்லுவதும், காம விகார எண்ணங் கொண்டு திரிவதும், தனக்குள் இறையாற்றல் வந்து விட்டதாகப் புலம்புவதும், சாதி பேதம் வளர்ப்பதும் என பல வழிகளிலும் மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி, அவர்களை அச்சுறுத்தி, பொருள் பறிப்பது ஒன்றையே நோக்கமாகக் கொண்டு செயல்படுபவர்கள் இவர்கள் (பெரிய ஞானக் கோவை, 1949, pp.113, 215, 352, 770, 727728). இப்படி மனம் அடங்காமல் தன்னைக் குருவென்று கூறித் திரிந்த பல போலி குருமார்கள் இறுதியில் காமம் தலைக்கேறி ஒன்றும் இல்லாமல்

மாண்டுபோவார்கள் என்பர் சித்தர் (பெரிய ஞானக் கோவை, *1949*, p.*338*).

சூஃபிகளும் சித்தர்களைப் போன்றே போலிகளைச் சாடியிருக்கின்றனர். பாவி அதிகம் பேசுவான், தன்னை மெய்ஞ்ஞானி என்பான், மந்திரங்கள் சொல்வதாகக் கூறுவான், ஞானம் பல பேசுவான், ஆன்மா அழிந்து விட்டாலும் உடல் அழியாது என்பான், முன்பு கேடான சாதியில் இருந்ததாகவும் இப்போது மேலான 'தீன்' குலத்தில் பிறந்திருப்பதாகவும் கூறுவான், புத்திமதிகள் பல சொல்லி மயக்கிடுவான். மேலும், தன்னால் இறைவனைக் காட்ட முடியும் என்பான், பணம் பொன்னுக்காக ஆசை வைத்து நாவினிக்கப் பேசி மனதைக் கவருவான், பிறகு முழுமையாக நம்மை ஏய்த்து விடுவான் (அஜ்மல் கான் - உவைஸ், *1997*, p.*501*). இவ்வாறாக குருவின் தேவையை மக்களுக்கு உணர்த்திய அதே வேளையில் போலி குருவிடம் வீழ்ந்து விடாமல் இருக்க மக்களை எச்சரிக்கும் போக்கில் சித்தர்களும் சூஃபிகளும் ஒன்றுபோலவே சிந்தித்துள்ளனர்.

## இறை ஒருமை

சித்தர் சூஃபி இலக்கியங்கள் இறை ஒருமையை அதிகமாக வலியுறுத்திப் பாடியுள்ளன. சித்தர்களுடைய பாடல்கள் ஒன்றே கடவுள் என்னும் கொள்கையை உலகுக்கு அறிவுறுத்துகின்றன. சித்தர்களுள் ஒருவரான திருமூலர், 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என உறுதியாக உரைக்கின்றார் (திருமந்திரம், *1962*, ஜீ.*2104*). இக்கருத்தையே அகத்தியரும், 'ஒருவனென்ற தெய்வத்தை வணங்கவேணும்' என்கின்றார் (பெரிய ஞானக் கோவை, *1949*, ஜீ.*307*). உள்ளது ஒரே கடவுள். அது தன்னையே உயிராகவும் உலகமாகவும் தனது மாயா சக்தியால் காட்டும் வல்லமை உடையது. ஒன்றான கடவுளையே உலக மக்கள் தம்முடைய சமய நம்பிக்கைகளுக்கு ஏற்ப பல்வேறு நாமங்களால் வழிபடுகின்றனர் என்பது சித்தர்களின் தெளிவான கருத்து முடிவாகும்.

சூஃபிகளுள் கபீருடைய ஏக இறைச் சிந்தனை மிகவும் சிறப்புக்குரியதாகும். "இந்துக்களுடைய தெய்வம் காசியிலும், இஸ்லாமியர்களுடைய தெய்வம் மெக்காவிலும் இருக்க அனைவருக்கும் பொதுவாகிய தெய்வம் எல்லா உயிர்களின் இதயத்துக்குள்ளேயே இருக்கின்றான்" (வாழ்வியற் களஞ்சியம், *1991*, p.*36*) என்னும் இவருடைய மத இணக்கக் கொள்கைகள் சித்தர்களுடைய ஓரிறைக் கொள்கையை அப்படியே பிரதிபலிக்கின்றன."நம்முடைய ராமர், ரஹீம், கரீம், கேசவன், அல்லா எல்லோருமே அந்த ராமர்தான்! ஐயத்தை ஒழி. ஈசுவரன் ஒருவரே. அவரே உலகம் தாங்கி. இரண்டாமவர் கிடையாது. கடவுள் இருவரல்லர்; ஒருவரே. யார் எப்படிச் சொல்லிக் குழப்பினாலும் இப்பாதையை விட்டு விலகாதே" என்றும் அவர் மக்களை எச்சரிக்கின்றார் (வாழ்வியற் களஞ்சியம், *1991*, p.*37*).

தன்னையறிதல் என்பது சித்தர்கள் வலியுறுத்தும் மிக உயரிய ஆன்மீக அனுபவமாகும். தன்னையறியாதக் காரணத்தால்தான் உலக மக்கள் துன்பத்தில் தத்தளிக்கின்றார்கள். தன்னையறிந்தவர்கள் கேடில்லா வாழ்க்கையை வாழ்வார்கள் என்பது சித்தர்களின் கொள்கையாகும். இக்கொள்கையை, 'தன்னையறியத் தனக்கொரு கேடில்லை, தன்னையறியாமல் தானே கெடுகின்றான்' எனத் திருமூலர் விளக்கப்படுத்துகின்றார். இக்கொள்கை உலக மக்கள் எல்லாருக்கும் பொதுவானது என்பதை, 'எவன் தன்னை அறிந்தானோ, அவன் நிச்சயமாக தன் தலைவனை அறிந்தான்' என்னும் நபிகள் நாயகத்தின் வாக்கால் அறியலாம் (கமலக்கண்ணன், *1997*, p.*61*). தன்னையறிதலின் முக்கியத்துவம் சூஃபி பாடல்களில் அதிகம் வலியுறுத்தப்படுகின்றது.

சித்தர்கள் இறைவனை காதலியாகவும் ஞானகுருவாகவும் தாயாகவும் தந்தையாகவும் இன்னும் பலவாகவும் உருவகப்படுத்திப் பாடுவதுண்டு. இறைவனுக்கும் தமக்குமிடையே யாதொரு கட்டுப்பாடும் இல்லாத நிலையில் அவர்கள் இறைவனைச் சிந்தித்தது போலவே சூஃபிகளும் சிந்தித்திருக்கிறார்கள். குணங்குடி மஸ்தான் என்னும் சூஃபி, தம்முடைய ஞானகுரு தமக்கு

உண்மை ஞானமளித்து காப்பாற்றுமாறு கண்ணீர் மல்கப் பாடியுள்ள பாடல்கள் இனிமை தோய்ந்த சூஃபியப் பாடல்களுக்குச் சிறந்த சான்றாகத் திகழ்கின்றன. குணங்குடி மஸ்தான் சித்தர் பாடல்களில் தோய்ந்த நெஞ்சினை உடையவர். எனவே சூஃபியத் தத்துவத்தை சித்தர் பாடல் அமைப்பில் இவர் பாடியுள்ளார். சித்தர்கள் பயன்படுத்தியுள்ள குறியீடுகளையும் (symbols) பதி, பசு, பாசம், கன்மம், மாயை, நமசிவாய, சிவனடி, போன்ற சைவ சித்தாந்தம் சார்ந்த சொற்களையும் இவர் தனது பாடல்களில் பரவலாகப் பயன்படுத்தியுள்ளார். இன்னும், சித்தர்களுடையப் பாடல்களில் இறைவன் அணு எனவும் குறிக்கப்படுகின்றான். ‘அணுவில் அணுவினை ஆதி பிரானை’ என்பர் சித்தர். பெண் சூஃபியான இறசூல் பீவியின் பாடல்களில் பல இடங்களில் இறைவன் அணுவுக்குள் அணுவானவன் என்னும் பொருளில் குறிப்பிடப்பட்டுள்ளான். இவரைப் போன்றே இறை ஒருமையைப் பேசும்போது பெரும்பாலான சூஃபிகளுடைய பாடல்களில் சித்தர் பாடல்களின் சாயல் இருப்பதைப் பரவலாகக் காணமுடிகின்றது.

### சித்தர் சூஃபி திருத்தலங்கள்

தமிழ்நாட்டில் இருக்கின்ற புகழ்ப்பெற்ற சமயத் திருத்தலங்கள் சித்தர்களின் சமாதிமீதோ, சமாதியை ஒட்டியோ அமைந்திருக்கும். போகரின் சமாதிமீது பழனி முருகன் கோயில் அமைந்திருப்பது இதற்குச் சான்றாகும். இது போன்றே திருவண்ணாமலை, திருப்பரங்குன்றம், மதுரை மீனாட்சி அம்மன் ஆலயம் என நூற்றுக்கணக்கான ஆலயங்கள் பதினெண் சித்தர்கள், ஏனைய சித்தர்கள் என பல நூறு சித்தர்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றன. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் சமாதியான சித்தராயினும் இருபத்தொன்றாம் நூற்றாண்டில் சமாதிகண்ட சித்தராயினும், சித்தர்களின் சமாதிகள் எப்போதும் மக்களை ஈர்க்கின்ற ஆன்மீக மையங்களாக உருமாற்றம் பெற்றுவருவதை இன்றும் தமிழ்நாட்டில் காணமுடிகிறது. சித்தர்களின் சமாதி போன்றே சூஃபிகளின் சமாதிகளும் தமிழ்நாட்டில் புகழ்பெற்றவையாக விளங்குகின்றன.

சூஃபித்துவத்தின் தோற்றத்தோடு இறை நேசர்கள் (wali) குழாமும் உருவானது எனலாம். வலிமார் (wali) என இந்த இறை நேசர்கள் அழைக்கப்பட்டனர். சூஃபித்துவ வழிகாட்டிகளாய்த் திகழ்ந்த இத்தகைய இறை நேசர் பெயரால் நினைவுச் சின்னங்கள் தோன்றின. இறை நேசர்களின் சமாதிகள் காலவோட்டத்தில் திருத்தலங்களாக உருவாகின. முஸ்லீம்கள் மட்டுமின்றி பிற மதத்தவரும் ஆண்டுதோறும் புனித யாத்திரை மேற்கொள்ளும் புனிதத் தலங்களாக இவைத் திகழ்ந்தன. தமிழகத்தில் உள்ள நாகூர், முத்துப்பேட்டை போன்ற இடங்களில் உள்ள சூஃபிகளின் சமாதிகளை இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம் (நயினார் முகம்மது, 1978, p.133). இலங்கையிலும் இத்தகைய புனிதத் தலங்கள் பல உள்ளன. தங்களுக்கு ஏற்பட்டுள்ள உலகியல் துன்பங்களும் சிக்கல்களும் தீரவேண்டும் என்பதற்காக பொதுமக்கள் இத்தலங்களுக்குச் செல்கின்றார்கள். ஆன்மீகத் தேடல் உள்ளவர்களும் இங்கே செல்வதுண்டு. இவ்விடங்களில் சமாதி கொண்டுள்ள ஞானியர்கள் தங்களுக்கு எல்லா நிலைகளிலும் உதவக்கூடிய பேராற்றலைப் பெற்றுள்ளார்கள் என்னும் நம்பிக்கையே பொதுமக்கள் இத்தலங்களுக்குச் செல்வதற்குக் காரணமாக அமைகின்றன.

### முடிவுரை

பொதுவாகவே சூஃபித்துவம் தமிழ் நாட்டுக்கு வந்து சேர்ந்த பின்னர் தமிழ் நாட்டின் மண் வாசனை சூஃபித்துவத்தில் கலந்துள்ளதை சூஃபி இலக்கியங்களின் வழி அறியமுடிகின்றது. இது பல ஆறுகள் பொதுக்கடலில் கலப்பதைப் போன்றது. இத்தகைய கலப்பை சமரசப் பண்பு என அழைக்கலாம். தமிழ் நாட்டிலும் இலங்கையிலும் தமிழ் பேசும் மக்களிடையே பல சூஃபி ஞானியர் தோன்றி உள்ளனர். தமிழ் மொழியில் பாடப்பட்டுள்ள அவர்களது பாடல்களில் முன்பிருந்த தமிழ்ச் சித்தர்களின் பாடல்களில் காணப் பெறுகின்ற கருத்துகள் பரவலாகக் காணப்படுகின்றன. சித்தர்களும் சூஃபிகளும் மெய்ஞ்ஞானம்

பெறுவது ஒன்றையே தங்கள் வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள். எனவேதான் சூஃபிகளின் பாடல்களில் இயல்பாகவே சித்தர்களின் தாக்கம் வந்து அமைந்து விடுகின்றது.

அதுமட்டும் அல்லாமல் தமிழ் நாட்டில் வாழ்ந்த சூஃபிகளின் காலத்துக்கு முன்பே சித்தர் பாடல்கள் மக்களிடையே புழக்கத்தில் இருந்தன. மெய்ஞ்ஞானத் தேடலில் ஈடுபட்டிருந்த சூஃபிகள் இச்சித்தர்ப் பாடல்களில் ஆழ்ந்ததன் காரணமாக சித்தர் தாக்கம் சூஃபிகளின் பாடல்களில் வெளிப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இம்மெய்ஞ்ஞானியர்களின் வரவால் தமிழகத்து இந்துக்களும் முஸ்லீம்களும் மெய்ஞ்ஞானத் தேடலின் பக்கம் தங்களது பார்வையைத் திருப்பவும், சாதி சமய பேதமின்றி வாழவும், சித்த மருத்துவ முறைகளைப் பரவலாக அறிந்திருக்கவும், நல்ல ஆன்மீகத் தமிழ் இலக்கியங்களைப் பெற்றிருக்கவும், சிறந்த தியான வழிபாட்டுத் தலங்களைக் கொண்டிருக்கவும் வழி ஏற்பட்டுள்ளது. இம்மெய்ஞ்ஞானியர்கள் விதைத்த ஆன்மீகம் என்னும் விதை இன்று மிகப் பெரிய சித்தர்சூஃபிய சிந்தனையாளர் கூட்டத்தை உருவாக்கியுள்ளது. தமிழ் நாட்டில் மட்டும் அல்லாமல் உலக நாடுகள் பலவற்றில் வாழும் தமிழர்களிடையே மெய்ஞ்ஞானச் சிந்தனைகள் வேர் விடுவதற்கு சித்தர்களும் சூஃபிகளும் விட்டுச் சென்றுள்ள மெய்ஞ் ஞான இலக்கியங்கள் பெரும்பங்காற்றி வருகின்றன.

## References


Ajmal Khan, M., P, & Uvais, M., P. (1997). *Islamiya Tamil Ilakiya Varalaru.* Madurai: Madurai Kamraj University.

Kamalakannan, P. (1997). *Thirupukazh Kaattum Mukthi Neri.* Chennai: Vanathi Publications.

Narayanan, K. (1988). *Sithar Thathuvam.* Chennai: Tamil Puthagalayam.

Nayinar Muhamad , S. (1978). *Islamiyath Tamil Ilakkiya Kaddurai Koovai.* Thiruchy: Islamiyath Tamil Ilakkiyak Kalagam.

Saravanamuthupillai, V. (Ed). (1949). *Periya Ngana Kovai.* Chennai: Ratna Naikar & Sons.

Subramaniam, N, & Kausalya Subramaniam. (1993). *Inthiya Sinthanai Marabu.* Chennai: South Asian Books.

*Thirumanthiram.* (1962). Chennai: Saiva Sithantha Nurpathippuk Kazhagam.

*Vazjviyal Kalanjiyam.* (1991). (Vol, 6). Thanjavur: Thanjavur Tamil University.